செ.வெ.எண்: 400 நாள்: 11.06.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 ஆயிரம் எக்டர் பரப்பளவில் வேளாண்மை வளர்ச்சி இயக்கத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.**

**கோடை உழவு செய்வதற்கு எக்டருக்கு ரூ.1,250 மானியம் மற்றும் உயிர் உரங்கள் 50% மானியத்தில் வழங்கப்பட உள்ளது.**

**வேளாண்மை வளர்ச்சி இயக்கத்தின் கீழ் சிறப்பாக செயல்படும் விவசாயிகள் குழுக்களுக்கு இயந்திரங்கள் வாங்கிட ரூ.10 இலட்சம் மானியம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 ஆயிரம் எக்டர் பரப்பளவில் வேளாண்மை வளர்ச்சி இயக்கத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. கோடை உழவு செய்வதற்கு எக்டருக்கு ரூ.1,250 மானியம் மற்றும் உயிர் உரங்கள் 50% மானியத்தில் வழங்கப்பட உள்ளது. வேளாண்மை வளர்ச்சி இயக்கத்தின் கீழ் சிறப்பாக செயல்படும் விவசாயிகள் குழுக்களுக்கு இயந்திரங்கள் வாங்கிட ரூ.10 இலட்சம் மானியம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

புதுக்கோட்டை மாவட்ட மானாவாரி விவசாயிகள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி வேளாண்மை வளர்ச்சி இயக்கம் என்ற திட்டம் நடப்பு 2020-21-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் மானாவாரி நிலங்கள் 100 எக்டர் கொண்ட தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு தொகுப்பில் உள்ள விவசாயிகளுக்கு கோடை உழவு செய்வதற்கு எக்டருக்கு ரூ.1,250 மானியமும், அவ்விவசாயிகளின் மானாவாரி சாகுபடிக்கு தேவையான விதைகள், உயிர் உரங்கள், ஊடுபயிர் சாகுபடிக்கான விதைகள் மற்றும் விதை நேர்த்தி மருந்துகள் ஆகியன 50% மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. மேலும், தெரிவு செய்யப்பட்ட தொகுப்பில் சிறப்பாக செயல்படும் விவசாயிகள் குழுக்களுக்கு விவசாய விளைபொருட்களை மதிப்பு கூட்டுவதற்கான இயந்திரங்கள் கொள்முதல் செய்திட ரூ.10 இலட்சம் மானியம் வழங்கப்பட உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்திட்டம் 10 ஆயிரம் எக்டர் பரப்பளவில் 100 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இத்தொகுப்புகளில் உள்ள

மானாவாரி நிலங்களில் நேரடி நெல் விதைப்பு, மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு, சாமை, குதிரைவாலி, தினை போன்ற சிறுதானியங்கள், உளுந்து, துவரை, பாசிப்பயறு போன்ற பயறு வகைகள், நிலக்கடலை, எள் போன்ற எண்ணெய்வித்துப் பயிர்கள் ஆகியவற்றை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை, திருவரங்குளம், கறம்பக்குடி, அறந்தாங்கி, பொன்னமராவதி, அன்னவாசல், விராலிமலை, குன்றாண்டார்கோவில் ஆகிய வட்டாரங்களில் தலா 5 தொகுப்புகளும், ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் - 25 தொகுப்புகளும், மணமேல்குடி வட்டாரத்தில் - 20 தொகுப்புகளும் மற்றும் அரிமளம் வட்டாரத்தில் -10 தொகுப்புகளிலும் செயல்படுத்தப்படவுள்ளது.

எனவே இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் மானாவாரி விவசாயிகள், தங்களது நில ஆவணங்கள், ஆதார் நகல் மற்றும் வங்கி கணக்குப் புத்தக நகல் ஆகியவற்றுடன் தங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**